## இனிமையான குழந்தைகளே, நீங்கள் டபுள் அஹிம்சாவாதி ஆக வேண்டும். மனம் சொல் செயல் மூலமாக நீங்கள் ஒருபோதும் யாருக்கும் துக்கம் கொடுக்க முடியாது.

கேள்வி: கல்ப கல்பமாக எந்தக் குழந்தைகள் பாபாவிடமிருந்து முழுமையான ஆஸ்தி எடுத்துள்ளார்கள்? அவர்களின் அடையாளம் என்ன?

பதில்: அவர்கள் தூய்மையற்றவர்களின் தொடர்பிலிருந்து விலகி, பாபாவிடமிருந்து ஆஸ்தி அடைவதற்காக ஸ்ரீமத்படி நடப்பார்கள். குடும்பத்தில் இருந்தாலும் தூய்மையாய் இருங்கள் என்ற பாபாவின் முதல் கட்டளைப்படி முழுமையாக நடப்பார்கள். கடைசியில் இந்த உலகம் எப்படி நடக்கும் என்ற கேள்வியே ஒருபோதும் அவர்களுக்கு ஏற்படாது. அவர்களுக்குள் கிரிமினல் (குற்றம்) தாக்குதல் ஏற்பட முடியாது. அவர்கள் தங்களை சிவபாபா வின் பேரக் குழந்தைகளாகவும், பிரம்மாவின் குழந்தைகள் சகோதர சகோதரி களாகவும் புரிந்து நடப்பார்கள்.

பாடல்: மாதா ஓ மாதா............ ஓம் சாந்தி

குழந்தைகள் இப்போது வேறு யாருடைய மகிமையும் செய்யக் கூடாது. பக்தர்கள் மகிமை செய்கிறார்கள், இந்தப் பாடலில் பக்தி மார்க்கத்தினர் மம்மாவின் மகிமையைப் பாடியுள்ளனர். ஆனால் மம்மா அப்படி என்ன சேவை செய்தார் என்று அப்பாவி மனிதர் களுக்குத் தெரிவ தில்லை! (இவ்வுலகில்) இருந்து விட்டுச் சென்றிருக்கின்றனர், அவர் களுடைய மகிமை பாடு கிறார்கள். ஆனால் உண்மையில் மகிமை ஒரே ஒருவருக்குத் தான் பாடப்படுகிறது. அந்த ஒருவர் அமர்ந்து குழந்தைகளுக்குப் படிப்பிக்கிறார் மற்றும் அப்படி உருவாக்குகின்றார். நீங்களும் அவருடைய குழந்தைகள், பாரதம் மற்றும் உலகத்திற்கு சேவை செய்கின்றீர்கள். பாரதத்தின் மகிமை செய் கின்றார்கள். சித்திரங்கள் கூட பாரதத்தில் தான் இருக்கின்றன. பூஜை கூட ஜெகதம்பாவுக்கு இங்கே (பாரதத்தில்) அதிகம் நடக்கிறது. வெளியே (வெளிநாடுகளில்) கிடையாது. ஆங்காங்கே சிவனுடைய சித்திரங்கள் இருக் கின்றன, ஆனால் அவர்கள் இதைப் புரிந்து கொள்வதில்லை. உண்மையில் சிவனுக்குத் தான் மகிமை. சிவபாபா தான் பிறகு ஜெகதம்பா மற்றும் ஜெகத்பிதாவுக்கு மகிமை ஏற்படுத்து கின்றார். பாபாவிடமிருந்துதான் அனைவருக்கும் ஸ்ரீமத் கிடைக்கிறது. தில்வாடா கோயிலில் அனைவருடைய சித்திரமும் இருப்பதில்லை. குழந்தைகள் நிறைய பேர் இருக்கின்றார்கள். குழந்தைகளாகிய நீங்கள் அனை வரும் இராஜயோகம் கற்றுக் கொண்டிருக்கிறீர்கள். சிலருடைய சித்திரங்கள் தான் வெளிப்படு கின்றன.

பாபா நம்மை சொர்க்கத்தின் எஜமானர் ஆக்குகின்றார் என்று உங்களுக்குத் தெரியும். சிவபாபா இவருக்குள் அமர்ந்திருக்கின்றார். கல்பத்திற்கு முன்பும் இப்படித் தான் பரமபிதா பரமாத்மா நமக்கு இராஜயோகம் கற்றுக் கொடுத்திருந்தார். இப்போது நடைமுறையில் புத்தியில் தெரிய வருகிறது. மற்றொருவர் இதைக் கேட்கும் போது, சிலர் இது முற்றிலும் சரியான விசயம் என்று சொல்கின்றார்கள் மற்றும் சிலர் நாங்கள் எப்படி ஏற்றுக் கொள்வது என்று சொல் கின்றார்கள். அனைவரும் ஒரேமாதிரி இருப்பதில்லை. புதியதாக

யாராவது வரும்போது, இறை தந்தை என்ற பெயரை எப்போது கேட்டுள்ளீர்கள்? பகவான் என்ற பெயரை எப்போது கேட்டுள்ளீர்கள்? என்று கேள்வி கேட்கப்படுகிறது. நாங்கள் இறை தந்தையை நினைவு செய்வ தில்லை என்று சொல்லக்கூடிய எந்த மனிதரும் இருக்க முடியாது. ஏனெனில் இப்போது அனைவரும் துக்கமாக இருக்கின்றனர். எனவே பரமாத்மாவை கண்டிப்பாக நினைவு செய் கின்றார்கள். பதீத பாவனரே வாருங்கள் என்று சத்யுகத்தில் யாரும் சொல்ல மாட்டார்கள். துக்கத்தில் அனைவரும் நினைக்கின்றனர், சுகத்தில் யாரும் நினைக்க மாட்டார்கள். துக்கத்தில் யாரை நினைவு செய்கின்றனர்? ஒருவரை நினைவு செய்கின்றனர். நினைவு செய்தாலும் அவரைப் பற்றித் தெரிவதில்லை. வெறும் மகிமை செய்கின்றார்கள்.

இங்கே அனைத்து தர்மங்களின் விசயமும் இருக்கின்றது. மதமே சக்தி என்று பாடப் படுகிறது. எந்த மதத்தில் இத்தனை சக்தி உள்ளது? அனைத்து மதங்களிலும் இத்தனை சக்தி இருப்பதில்லை. பாபா வந்து ஒரு தேவிதேவதா தர்மத்தை ஸ்தாபனை செய்கின்றார். பாபாவை சர்வ வல்லமை நிறைந்தவர் என்று சொல்லப்படுகின்றது. ஆகையினால் அவர் எந்த தர்மத்தை ஸ்தாபனை செய்கின்றாரோ அதிலும் சக்தி இருக்கின்றது. நாம் தேவதா தர்மத்தினர் ஆகின்றோம் எனும் போது நமக்குள் எவ்வளவு சக்தி ஏற்படுகின்றது என்று உங்களுக்குத் தெரியும். நாம் பாபாவிட மிருந்து இராஜ்யத்தை அடைகின்றோம். நாம் எந்த இம்சையும் செய்வ தில்லை. சத்யுகத்தில் இரண்டு இம்சையும் ஏற்படுவதில்லை. ஒன்று காம விகாரம் என்ற ஆயுதத்தால் செய்யும் இம்சை, மற்றொன்று மற்றவர் மீது கோபப்படுவது, தவறான வார்த்தை கள் பேசுவது, இது கூட ஆயுதத்தை பயன்படுத்துவது போலாகும். இது இம்சை என்று சொல்லப் படுகின்றது. நீங்கள் யாருக்கும் துக்கம் கொடுக்க முடியாது. பாபா எவ்வளவு நன்றாகக் கற்பிக்கின்றார்! அனைவரையும் சுகமுடையவர் ஆக்குங்கள். முக்கியமானது காம விகாரத்தில் செல்வது - இது அனைத்தையும் விட பெரிய இம்சை ஆகும். துப்பாக்கி போன்றவற்றை பயன் படுத்துவது, அடிப்பது இது கூட இம்சை ஆகும். பிறருக்கு எந்த விதத்தில் துக்கம் கொடுத்தாலும் இம்சை ஆகும். ஆகையினால் காமம் மகா எதிரி என்று பாபா சொல்கிறார். 'அஹிம்சா பரமோ தேவி தேவதா தர்மம்' என்று பாடப்படுகிறது. அவர்களிடம் இரண்டு இம்சையும் இருந்தது கிடையாது. அவர்கள் ஒரு போதும் யாருக்கும் மனம் சொல் செயலால் துக்கம் கொடுக்க வில்லை. பாபா வந்து சொர்க்கத்தை ஸ்தாபனை செய்கின்றார். கல்பத்திற்கு முன்பு செய்திருந் தார், இப்போது மீண்டும் செய்து கொண்டிருக்கிறார். யாரையும் அடிப்பது, கோபப்படுவது இவை அனைத் திலிருந்தும் விடுவிக்கிறார். தூய்மை தான் முக்கியமானது. எனவே ராக்கி கட்டுவது (ரக்ஷா பந்தன்) கூட பாடப்பட்டுள்ளது. காம விகாரத்தில் செல்லக் கூடாது என்பதற்கான ராக்கி கயிற்றை சகோதரிகள் சகோதரர்களுக்கு கட்டுகின்றார்கள். ஆனால் மனிதர்கள் இதன் அர்த்தத்தைப் புரிந்து கொள்வதில்லை. நீங்கள் பிரம்மாவின் குழந்தைகள் மற்றும் சிவனின் பேரக்குழந்தைகள் ஆவீர்கள். ஆகையினால் நீங்கள் சகோதர சகோதரிகள் ஆவீர்கள். தங்களுக்குள் ஒருபோதும் தவறு செய்ய முடியாது. இது தூய்மையாவதற்கான யுக்தி ஆகும். சகோதரனும் சகோதரியும் தங்களுக்குள் திருமணம் செய்து கொள்ள மாட்டார்கள். கல்ப கல்பமாக யார் ஆஸ்தி எடுத்திருந்தார்களோ, அவர்கள் தான் ஸ்ரீமத்படி நடக்கிறார்கள். அதர் குமாரி, (திருமணமான பெண்) தூய்மையான கன்னிகைக்கான கோயில் கூட உள்ளது.

குடும்பத் திலிருந்து பாபாவின் குழந்தை ஆகியுள்ளார்கள் என்றால் அவர்களை அதர் என்று சொல்லப் படுகிறது. கண்டிப்பாக (தூய்மையாக) இருந்து விட்டுச் சென்றிருக்கின்றனர், இப்போது மீண்டும் நடைமுறையில் இருக்கின்றனர். நாம் தூய்மையாகி விட்டால் இந்த உலகம் எப்படி நடக்கும் என்று சந்தேகம் கொள்ளாதீர்கள். இப்போது இது தூய்மையற்ற உலகமாகி விட்டது. இப்போது தூய்மையான உலகம் வேண்டும். தூய்மையற்ற உலகம் நடந்து கொண்டு தான் இருக்கிறது, நின்று விடவில்லை. ஆகையினால் நீங்கள் தூய்மை யற்றவர்களின் தொடர்பை விட்டுவிட வேண்டும். பாபா வந்து விகார உலகத்தின் படைப்பை நிறுத்தி விடுகின்றார். சத்யுகத்திலிருந்து நிர்விகாரமான உலகம் ஆரம்பமாகும்.

பாபா வந்து குழந்தைகளுக்கு கட்டளை கொடுக்கிறார். சிலர் கேட்கிறார்கள், சிலர் கேட்ப தில்லை. ஸ்ரீமத் பகவானுடைய மகாவாக்கியம். பகவான் குழந்தைகளுக்கு அமர்ந்து படிப்பிக் கிறார். என்னவாக ஆக்குவார்? கண்டிப்பாக பகவான் பகவதியாக ஆக்குவார். யார் எப்படியோ, அவர்களை அப்படியே ஆக்குகின்றார். நிராகார பகவான் அமர்ந்து நிராகார மான ஆத்மாக் களுக்கு இந்த சரீரத்தின் மூலம் படிப்பிக்கின்றார். இது பாபாவினுடைய பெரிய செருப்பு. பாபாவுக்கு சரீரம் வேண்டுமல்லவா! அவருடைய சரீரம் என்ற செருப்பு பழையதாகி விட்டது. எப்போது புதியதாக இருந்ததோ அப்போது வெண்மையாக இருந்தது, இப்போது கருப்பாகி விட்டது. நீங்கள் இந்த நேரம் கருப்பாக (ஷ்யாம்) இருக்கின்றீர்கள், பிறகு அழகாக ஆகின்றீர்கள் என்று புரிய வைத்திருக்கின்றார். இந்த நேரம் ஒவ்வொருவரும் கருப்பாக ஆகி விட்டனர். அவர்கள் 84 பிறவிகள் எடுக்க வேண்டியதாய் இருக்கிறது. கிருஷ்ணர் முதலில் அழகாக இருந்தார். கொஞ்சம் கொஞ்சமாக அழகு குறைந்து கொண்டே போய்விட்டது. நரகத்தை காலால் எட்டி உதைத்துக் கொண்டும், கையில் சொர்க்கத்தை ஏந்தியவரும் கிருஷ்ணருடைய சித்திரம் கூட உள்ளது. நான் சொர்க்கத்தில் அழகாக இருந்தேன், இப்போது நரகத்தில் கருப்பாக இருக்கின்றேன், அதனால் தான் எட்டி உதைக் கின்றேன் என்று சொல்கிறார். சூரிய வம்சத்தைச் சேர்ந்த அனைவரும் மிக அழகாக இருந்தனர். முழு வம்சமும் இராஜ்யம் செய்திருந்தது. இப்போது அனைவரும் கருப்பாகி விட்டனர். அதனால் தான் ஷ்யாம் சுந்தர் என்ற பெயர் சொல்லப்படுகிறது. ஸ்ரீ கிருஷ்ணருடைய ஆத்மா தான் முதலில் பிறப்பெடுக்கிறது. கிருஷ்ணர் கூட முழு இராஜ்யமும் இருக்கிறது. மீண்டும் வெண்மையாவதற்கு அனைவரும் முயற்சி செய்து கொண்டிருக்கின்றனர். காளிங்கன் என்ற பாம்பு தீண்டியதாக சொல்கிறார்கள். அதுவும் இப்போதைக்கான விசயம் தான். மாயை அனைவரையும் தீண்டிக் கொண்டே இருக்கிறது. மாயை அனைவரை யும் கருப்பாக்கி விட்டது. பாபா மீண்டும் வெண்மையாக்குகின்றார். சொர்க்கத்தில் இப்படி ஆவதில்லை. அங்கே 21 பிறவிகள் அனைவரும் சுகமாக இருக்கின்றனர். அகால மரணம் ஒருபோதும் ஏற்படுவதில்லை. இப்போது தெய்வீக இராஜ்யம் ஸ்தாபனை ஆகிக் கொண்டி ருக்கிறது. பாபா வந்து அனைவருக்கும் ராஜ்ய பாக்கியத்தைக் கொடுக்கின்றார். மற்ற தர்மங்களை ஸ்தாபனை செய்யக்கூடிய யாரும் இராஜ்ய பாக்கியத்தைக் கொடுக்க முடியாது. இப்ராஹிம், புத்தர் ஆகியோர் இராஜ்யத்தை ஸ்தாபனை செய்வதில்லை. அவர்கள் தர்மத்தை மட்டும் ஸ்தாபனை செய்கின்றனர், பிறகு அதன் விரிவாக்கம் ஏற்படுகின்றது. உண்மையில் அவர்களை குரு என்று கூட சொல்ல முடியாது. ஏனெனில் சத்கதிக்காகத் தான் குருவிடம் செல்கின்றனர்.

அவர்கள் தர்மத்தை ஸ்தாபனை செய்வதற்கு வருகின்றார்களே தவிர சத்கதி கொடுப்பதற்காக அல்ல. அவருக்குப் பின்னால் அவருடைய தர்மத்தைச் சேர்ந்த ஆத்மாக் கள் கீழே இறங்குகின்றனர். ஆகையினால் குரு என்று உண்மையில் யாரையும் சொல்ல முடியாது. ஒரே ஒரு சிவபாபா தான் அனைவருக்கும் சத்கதி கொடுக்கின்றார். அவர் (சிவபாபா) பிறவி எடுக்கின்றார் என்று அவரை சொல்ல மாட்டார்கள். அது தவறாகி விடுகின்றது. அவர் அவதாரம் எடுக்கின்றார். பிறவி எடுப்பது என்றால் கர்ப்பத்தில் வருவ தாகும். நான் கர்ப்பத்தில் பிறவி எடுப்பதில்லை, அவதாரம் எடுக்கின்றேன். ஆனால் எப்படி வரு கின்றார், இதை யாரும் புரிந்து கொள்வதில்லை. நான் பரந்தாமத்திலிருந்து வந்து இந்த உடலில் பிரவேசம் செய்கின்றேன். எனக்கு சரீரம் வேண்டுமல்லவா! அதுவும் பெரிய முதுமை அடைந்த சரீரமாக வேண்டும். சிறிய உடல் மூலம் பேச முடியாது. நான் அனுபவம் நிறைந்த ரதத்தில், பல பிறவி களின் கடைசிப் பிறவியில், வானபிரஸ்த நிலையில் வருகின்றேன். நான் இவருடைய பிறவிகளை அறிந்திருக் கின்றேன் என்று கீதையில் கூட இருக்கின்றது. இவருக்குத் தன்னுடைய பிறவி களைப் பற்றித் தெரியாது. இப்போது தெரிந்திருக்கின்றார். ஒரு முறை சொல்கின்றேன் - 'முதலில் இவர் தேவதையாக இருந்தார், பிறகு 84 பிறவிகள் எடுத்து எடுத்து கடைசிப் பிறவியில் இருக்கின்றார், அப்போது நான் இவருக்குள் பிரவேசிக்கின்றேன்'. இது நன்மை செய்யக்கூடிய பிறவி. பாபா வந்து இவர் மூலமாக ஞானம் கற்பிக்கின்றார். ஆகவே இவர் தாய் ஆகிவிடுகின்றார். உண்மையில் இவர் தாய், ஆனால் தந்தையின் ரூபத்தில் சேவை செய்கின்றார். ஆகையினால் மம்மா நிமித்தமாக்கப்பட்டுள்ளார். குழந்தைகளாகிய நீங்களும் அவர்களின் கூட நிமித்தமா கின்றீர்கள். அனைவருக்கும் சொர்க்கவாசி ஆவதற்கான வழி சொல்கின்றீர்கள்.

மனிதர்கள் இறந்து விட்டால் சொர்க்கவாசி ஆகிவிட்டார் என்று சொல்கிறார்கள். அவர்கள் முயற்சி செய்வதில்லை. நாம் சொர்க்கவாசி ஆவதற்கு முயற்சி செய்து கொண்டி ருக்கின்றோம். சத்யுகத்தில் லக்ஷ்மி நாராயணன் இருந்தனர், அவர்களை சொர்க்கத்தின் எஜமானர் ஆக்கக்கூடியவர் யார்? கண்டிப்பாக அவ்வாறாக இல்லாதபோது தான் உருவாக்கு கின்றார். இதில் கஷ்டப்படுவதற்கான எந்த விசயமும் இல்லை. பாபா வழி மட்டும் கொடுக் கின்றார் - குடும்ப விவகாரங்களில் இருந்து கொண்டே இந்தக் கடைசிப் பிறவியில் தூய்மை ஆகுங்கள். இப்போது பழைய உலகத்தின் விநாசம் ஏற்பட வேண்டும். சத்யுகத்தில் இராவணனை எரிப்பதில்லை. இவையனைத்தும் ஆரம்பமும் முடிவுமின்றி நடந்து கொண்டே வருவதாக மனிதர்கள் சொல்கிறார்கள். ஆனால் எப்போதிலிருந்து நடக்கிறது என்று தெரிந்து கொள்ளவில்லை.துவாபர யுகத்திலிருந்து இராவணனை எரிக்க ஆரம்பித்தனர். இராவணனுடைய இருப்பிடம் என்று எதுவும் கிடையாது. சிவபாபாவுடைய இருப்பிடம் பரந்தாமம் ஆகும். இராவணனுடைய இடம் எங்கே உள்ளது? அது அனை வரிடமும் பிரவேசம் ஆகிவிடுகின்றது. ஏதோ ஒரு இருப்பிடம் என்பது கிடையாது. எப்போது இராவண இராஜ்யம் முடிந்து போகுமோ, அப்போது அனைவரும் தூய்மை ஆகிவிடுவார்கள். பிறகு இராவணனுடைய பெயர் அடையாளம் கூட இருக்காது. இராமன் மற்றும் இராவணன் என்று இரண்டு விசயங்கள் உள்ளன. இராமன் சொர்க்கத்தை ஸ்தாபனை செய்கின்றார், இராவணன் துக்கமானவராக ஆக்கு கின்றார். நான் சர்வவியாபி கிடையாது. இராவணன் சர்வ வியாபி, பிறகு நான் வந்து இந்த பூதங் களை

வெளியேற்றுகின்றேன். இந்த பூதங்கள் தான் அனைவருக்கும் துக்கம் கொடுக்கின்றது. இந்த பூதங்களின் மீது வெற்றி அடைய வைத்து சொர்க்கத்தின் எஜமானன் ஆக்கு கின்றேன். குழந்தைகளாகிய நீங்கள் அனைவரும் சொர்க்கவாசி ஆவதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கின்றீர்கள். சொர்க்கவாசி ஆகி விட்டார் என்று மனிதர்கள் சொல்கின்றனர். பிறகு ஏன் அழுகின்றீர்கள்? அங்கே எப்போதும் வைபவமாக விழாக்கள் இருக்கும். மனிதர்களுக்கு சொர்க்கம் தான் நினைவுக்கு வருகின்றது. ஆனால் மறுபிறவி நரகத்தில் தான் எடுக்கின்றார்கள். நீங்கள் சத்யுகத்தில் இருக்கும் போது மறுபிறவியும் சத்யுகத்தில் தான் எடுக்கின்றீர்கள். இப்போது நரகம் மாறி சொர்க்கம் வரப் போகின்றது. துக்கமான உலகம் மாறி சுகமான உலகம் வரப் போகின்றது. இப்போது அனைவரையும் சுகம் நிறைந்தவர்களாக்க அனைவருக்கும் சத்கதியை வழங்கக்கூடிய வள்ளல் வந்திருக்கின்றார். நல்லது.

இனிமையிலும் இனிமையான, வெகுகாலம் கழித்து, காணாமல் போய் கண்டெடுக்கப்பட்ட செல்லக் குழந்தைகளுக்கு தாய், தந்தையாகிய பாப்தாதாவின் அன்பு நினைவுகளும் காலை வணக்கமும். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்தே.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. டபுள் அஹிம்சாவாதி ஆகி மனம், சொல், செயல் மூலமாக யாருக்கும் துக்கம் கொடுக்கக் கூடாது. தூய்மைக்கான உண்மையான ராக்கி கட்டிக் கொள்ள வேண்டும்.

2. தூய்மையற்றவர்களின் தொடர்பை விடுத்து ஒரு பாபாவின் கட்டளைப் படி நடக்க வேண்டும் சொர்க்கத்தின் எஜமானர் ஆவதற்காக பூதங்களை வெற்றி அடைய வேண்டும்.

வரதானம்: ஒவ்வொரு காரியத்தின் சுமையையும் தந்தையிடம் கொடுத்து சுயம் டிரஸ்டியாக இருக்கக் கூடிய டபுள் லைட் பரிஸ்தா ஆகுக.

தைரியத்துடன் இருக்கும் குழந்தைகளுக்கு பாப்தாதா சதா உதவி செய்து கொண்டே இருப்பார். குழந்தைகள் சிரேஷ்ட சங்கல்பம் செய்தால் தந்தை ஆஜராகி விடுவார். தந்தையிடம் அனைத்துக் காரியங்களையும் விட்டு விட்டால் போதும், தந்தை அறிவார் காரியங்கள் அறியும். காரியங்களின் பொறுப்புச் சுமையை சுயம் சுமக்காமல் டிரஸ்டியாக இருந்தால் சதா இலேசாக, டபுள் லைட் பரிஸ்தாவாக பறந்து கொண்டே இருப்பீர்கள். தூய உள்ளம் இருந்தால் இறைவன் ஆஜராகி விடுவார்.

சுலோகன்: ஆர்வம்-உற்சாகம் என்ற இறக்கை சதா கூடவே இருந்தால் பறக்கும் கலையில் பறந்து கொண்டே இருப்பீர்கள்.